اُنْصُرْنَا فَاِنَّكَ خَيْرُ النَّاصِرِيْنَ. وَافْتَحْ لَنَا فَاِنَّكَ
خَيْرُ الْفَاتِحِيْنَ. وَاغْفِرْ لَنَا فَاِنَّكَ خَيْرُ الْغَافِرِيْنَ.
وَارْحَمْنَا فَاِنَّكَ خَيْرُ الرَّاحِمِيْنَ. وَارْزُقْنَا فَاِنَّكَ
خَيْرُ الرَّازِقِيْنَ. وَاهْدِنَا وَنَجِّنَا مِنَ الْقَوْمِ
الظَّالِمِيْنَ. وَهَبْ لَنَا رِيْحًا طَيِّبَةً كَمَا هِيَ فِيْ
عِلْمِكَ وَانْشُرْهَا عَلَيْنَا مِنْ خَزَآئِنِ رَحْمَتِكَ
وَحَمِّلْنَا بِهَا حَمْلَ الْكَرَامَةِ مَعَ الْعَافِيَةِ وَالسَّلَامَةِ
فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ اِنَّكَ عَلٰى كُلِّ شَيْئٍ
قَدِيْرٌ. اَللّٰهُمَّ يَسِّرْ لَنَا اُمُوْرَنَا مَعَ الرَّاحَةِ لِقُلُوْبِنَا
وَاَبْدَانِنَا وَالسَّلَامَةِ وَالْعَافِيَةِ فِيْ دِيْنِنَا وَ
دُنْيَانَا. وَكُنْ لَنَا صَاحِبًا فِيْ سَفَرِنَا وَخَلِيْفَةً فِيْ
اَهْلِنَا وَاطْمِسْ عَلٰى وُجُوْهِ اَعْدَآئِنَا وَامْسَخْهُمْ
عَلٰى مَكَانَتِهِمْ فَلَا يَسْتَطِيْعُوْنَ الْمُضِيَّ وَلَا



الْمَجِيْئَ اِلَيْنَا. وَلَوْ نَشَآءُ لَطَمَسْنَا عَلٰى اَعْيُنِهِمْ
فَاسْتَبَقُوا الصِّرَاطَ فَاَنّٰى يُبْصِرُوْنَ ۝ وَلَوْ نَشَآءُ
لَمَسَخْنٰهُمْ عَلٰى مَكَانَتِهِمْ فَمَا اسْتَطَاعُوْا مُضِيًّا
وَّلَا يَرْجِعُوْنَ ۝ يٰسٓ ، وَالْقُرْاٰنِ الْحَكِيْمِ ۝ اِنَّكَ لَمِنَ
الْمُرْسَلِيْنَ ۝ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ۝ تَنْزِيْلَ
الْعَزِيْزِ الرَّحِيْمِ ۝ لِتُنْذِرَ قَوْمًا مَّآ اُنْذِرَ اٰبَآؤُهُمْ
فَهُمْ غَافِلُوْنَ ۝ لَقَدْ حَقَّ الْقَوْلُ عَلٰٓى اَكْثَرِهِمْ
فَهُمْ لَا يُؤْمِنُوْنَ ۝ اِنَّا جَعَلْنَا فِيْٓ اَعْنَاقِهِمْ اَغْلٰلًا
فَهِيَ اِلَى الْاَذْقَانِ فَهُمْ مُّقْمَحُوْنَ ۝ وَجَعَلْنَا مِنْ
بَيْنِ اَيْدِيْهِمْ سَدًّا وَّمِنْ خَلْفِهِمْ سَدًّا فَاَغْشَيْنٰهُمْ
فَهُمْ لَا يُبْصِرُوْنَ ۝ شَاهَتِ الْوُجُوْهُ. شَاهَتِ الْوُجُوْهُ
شَاهَتِ الْوُجُوْهُ. وَعَنَتِ الْوُجُوْهُ لِلْحَيِّ الْقَيُّوْمِ
وَقَدْ خَابَ مَنْ حَمَلَ ظُلْمًا. طٰسٓ. طٰسٓمّٓ
حٰمٓ عٓسٓقٓ. مَرَجَ الْبَحْرَيْنِ يَلْتَقِيَانِ ۝ بَيْنَهُمَا
بَرْزَخٌ لَّا يَبْغِيَانِ ۝ حٰمٓ. حٰمٓ. حٰمٓ. حٰمٓ. حٰمٓ
حٰمٓ. حٰمٓ. حُمَّ الْاَمْرُ وَجَآءَ النَّصْرُ فَعَلَيْنَا لَا
يُنْصَرُوْنَ ۝ حٰمٓ ۝ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ
الْعَلِيْمِ ۝ غَافِرِ الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ
الْعِقَابِ ذِى الطَّوْلِ لَآ اِلٰهَ اِلَّا هُوَ اِلَيْهِ

الْمَصِيرُ. بِسْمِ اللهِ بَابُنَا. تَبَارَكَ حِيطَانُنَا.
يٰسٓ سَقْفُنَا. كٓهٰيٰعٓصٓ كِفَايَتُنَا. حٰمٓ عٓسٓقٓ
حِمَايَتُنَا فَسَيَكْفِيكَهُمُ اللهُ وَهُوَ السَّمِيعُ
الْعَلِيمُ. بِاَلْفِ اَلْفِ لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا
بِاللهِ الْعَلِيِّ الْعَظِيمِ. سِتْرُ الْعَرْشِ مَسْبُولٌ
عَلَيْنَا وَكَلِمَةُ اللهِ اَقْفَالٌ عَلَيْنَا وَعَيْنُ اللهِ
نَاظِرَةٌ اِلَيْنَا بِحَوْلِ اللهِ لَا يَقْدِرُ اَحَدٌ عَلَيْنَا
وَاللهُ مِنْ وَّرَآئِهِمْ مُّحِيطٌ بَلْ هُوَ قُرْاٰنٌ مَّجِيدٌ
فِي لَوْحٍ مَّحْفُوظٍ. فَاللهُ خَيْرٌ حَافِظًا وَّهُوَ اَرْحَمُ
الرَّاحِمِينَ ٣. اِنَّ وَلِيِّيَ اللهُ الَّذِي نَزَّلَ الْكِتَابَ
وَهُوَ يَتَوَلَّى الصَّالِحِينَ ٣. حَسْبِيَ اللهُ لَا اِلٰهَ
اِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيمِ.
بِسْمِ اللهِ الَّذِي لَا يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي
الْاَرْضِ وَلَا فِي السَّمَآءِ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ ٣
لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيمِ ٣.
وَهُوَ حَسْبِي وَنِعْمَ الْوَكِيلُ نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ
النَّصِيرُ. وَصَلَّى اللهُ وَسَلَّمَ وَبَارَكَ عَلٰى خَيْرِ
خَلْقِهِ سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهِ وَصَحْبِهِ اَجْمَعِينَ
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ.



இந்த ஹிஸ்புல் பஹ்ரில் வரக்கூடிய ஏழு ஹாமீமில் முந்தியதைச் சொல்லும் போது முகத்துக்கு முன்னாலும், இரண்டாவதில் பின்னாலும், மூன்றாவதில் தனது வலது பக்கத்திலும், நான்காவதில் தனது இடது பக்கத்திலும், ஐந்தாவதில் மேல் பக்கமாகவும், ஆறாவதில் கீழாகவும், ஏழாவதில் மேற்கூறப்பட்ட பக்கங்கள் அனைத்திலும் தனது கையைக் கொண்டு சைக்கினை செய்யவும். كٓهٰيٰعٓصٓ இதைச் சொல்லும் போது ஒவ்வொரு எழுத்தைச் சொல்லும் போதும் ஒவ்வொரு விரலாகப் பொத்தவும். முதலில் சுண்டு விரலிலிருந்து . ஆரம்பிக்கவும். பின் حٰمٓ عٓسٓقٓ என்ற வார்த்தையைச் சொல்லும் போது பொத்திய விரல்களை ஒவ்வொரு எழுத்துக்கு ஒரு விரல் வீதம் திறக்கவும். திறப்பதில் முதலில் பெரு விரலிலிருந்து ஆரம்பிக்கவும்.

## حِزْبُ النَّصْرِ ஹிஸ்புன்னஸ்ர்.

இதுவும் செய்யிதுனா அபுல்ஹஸன் ஷாதிலி இமாம் (ரஹ்) அவர்கள் ஓதி வந்த விர்துகளில் நின்றும் உள்ளதாகும். அதன் விபரமாவது:-

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ. اَللّٰهُمَّ بِسَطْوَةِ
جَبَرُوتِ قَهْرِكَ. وَبِسُرْعَةِ اِغَاثَةِ نَصْرِكَ.
وَبِغَيْرَتِكَ لِانْتِهَاكِ حُرُمَاتِكَ. وَبِحِمَايَتِكَ
لِمَنِ احْتَمٰى بِاٰيَاتِكَ. نَسْئَلُكَ يَا سَمِيعُ يَا
مُجِيبُ يَا سَرِيعُ يَا مُنْتَقِمُ يَا قَهَّارُ يَا شَدِيدَ
الْبَطْشِ يَا مَنْ لَا يُعْجِزُهُ قَهْرُ الْجَبَابِرَةِ وَلَا يَعْظُمُ
عَلَيْهِ اِهْلَاكُ الْمُتَمَرِّدَةِ مِنَ الْمُلُوكِ الْاَكَاسِرَةِ.
نَسْئَلُكَ اللّٰهُمَّ اَنْ تَجْعَلَ كَيْدَ مَنْ كَادَنَا فِي نَحْرِهِ.
وَمَكْرَ مَنْ مَكَرَ بِنَا عَائِدًا عَلَيْهِ. وَحُفْرَةَ مَنْ حَفَرَ
لَنَا وَاقِعًا فِيهَا. وَمَنْ نَصَبَ لَنَا شَبَكَةَ الْخِدَاعِ
اِجْعَلْهُ يَا سَيِّدِي مُسَاقًا اِلَيْهَا وَمُصَادًا فِيهَا وَ
اَسِيرًا لَدَيْهَا. اَللّٰهُمَّ بِحَقِّ كٓهٰيٰعٓصٓ اِكْفِنَا هَمَّ

الْعِدٰى وَلَقِّهِمُ الرَّدٰى. وَاجْعَلْ لَّهُمْ لِكُلِّ...
حَبِيْبٍ فِدٰى. وَسَلِّطِ اللّٰهُمَّ عَلَيْهِمْ عَاجِلَ النِّقَمِ
فِي الْيَوْمِ وَفِي الْغَدِ. اَللّٰهُمَّ بَدِّدْ شَمْلَهُمْ. اَللّٰهُمَّ
فَرِّقْ جَمْعَهُمْ. اَللّٰهُمَّ فُلَّ حِدَّهُمْ وَاَقِلَّ عَدَدَهُمْ
اَللّٰهُمَّ اجْعَلِ الدَّآئِرَةَ عَلَيْهِمْ. اَللّٰهُمَّ اَرْسِلِ
الْعَذَابَ اِلَيْهِمْ. اَللّٰهُمَّ اَخْرِجْهُمْ مِنْ دَآئِرَةِ الْحِلْمِ
وَاسْلُبْهُمْ مَدَدَ الْاِمْهَالِ وَغُلَّ اَيْدِيَهُمْ وَارْبُطْ
عَلٰى قُلُوْبِهِمْ وَلَا تُبَلِّغْهُمُ الْاٰمَالَ. اَللّٰهُمَّ مَزِّقْهُمْ
كُلَّ مُمَزَّقٍ مَّزَّقْتَهٗ لِاَعْدَآئِكَ اِنْتِصَارًا لِّاَنْبِيَآئِكَ
وَرُسُلِكَ وَاَوْلِيَآئِكَ. اَللّٰهُمَّ انْتَصِرْ لَنَا انْتِصَارَكَ
لِاَنْبِيَآئِكَ وَرُسُلِكَ عَلٰى اَعْدَآئِكَ. اَللّٰهُمَّ لَا -
تُمَكِّنِ الْاَعْدَآءَ فِيْنَا وَلَا تُسَلِّطْهُمْ عَلَيْنَا بِذُنُوْبِنَا.
حٰمٓ. حٰمٓ. حٰمٓ. حٰمٓ. حٰمٓ. حٰمٓ. حٰمٓ لَا يُنْصَرُوْنَ.
اَللّٰهُمَّ بِحَقِّ حٰمٓ عٓسٓقٓ حِمَيْتِنَا مِمَّا نَخَافُ. اَللّٰهُمَّ
قِنَا الْاَسْوَآءَ وَلَا تَجْعَلْنَا مَحَلًّا لِّلْبَلْوَآءِ. اَللّٰهُمَّ
وَاَعْطِنَا اَمَلَ الرَّجَآءِ وَفَوْقَ الْاَمَلِ يَامَنْ بِفَضْلِهٖ
لِفَضْلِهٖ نَسْئَلُ الْعَجَلَ الْعَجَلَ الْاِجَابَةَ الْاِجَابَةَ
يَامَنْ اَجَابَ نُوْحًا عَلٰى قَوْمِهٖ. يَامَنْ نَّصَرَ
اِبْرَاهِيْمَ عَلٰى اَعْدَآئِهٖ. يَامَنْ رَدَّ يُوْسُفَ عَلٰى
يَعْقُوْبَ. يَامَنْ كَشَفَ ضُرَّ اَيُّوْبَ. يَامَنْ



اَجَابَ دَعْوَةَ زَكَرِيَّا. يَامَنْ قَبِلَ تَسْبِيْحَ
يُوْنُسَ بْنِ مَتّٰى. نَسْئَلُكَ اللّٰهُمَّ بِاَسْرَارِ اَصْحَابِ
هٰذِهِ الدَّعَوَاتِ الْمُسْتَجَابَاتِ اَنْ تَتَقَبَّلَ مِنَّا مَا
بِهٖ دَعَوْنَاكَ وَاَنْ تُعْطِيَنَا مَا سَئَلْنَا. اَنْجِزْ لَنَا
وَعْدَكَ الَّذِيْ وَعَدْتَّهٗ لِعِبَادِكَ الْمُؤْمِنِيْنَ.
اِنْقَطَعَتْ اٰمَالُنَا وَعِزَّتِكَ اِلَّا مِنْكَ وَخَابَ رَجَآؤُنَا
وَحَقِّكَ اِلَّا فِيْكَ. اِنْ اَبْطَاَتْ غَارَةُ الْاَرْحَامِ
وَابْتَعَدَتْ عَنَّا فَاَسْرَعُ شَيْئٍ غَارَةُ اللّٰهِ
يَاغَارَةَ اللّٰهِ جُدِّي السَّيْرَ مُسْرِعَةً فِيْ حَلِّ
عُقْدَتِنَا يَاغَارَةَ اللّٰهِ عَدَتِ الْعَادُوْنَ وَ
جَارُوْا وَكَفٰى بِاللّٰهِ وَلِيًّا وَّكَفٰى بِاللّٰهِ نَصِيْرًا.
وَحَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ. لَاحَوْلَ وَلَا -
قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ. سَلَامٌ عَلٰى
نُوْحٍ فِي الْعَالَمِيْنَ. اِسْتَجِبْ لَنَا اٰمِيْنَ ٣
فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِيْنَ ظَلَمُوْا فَاَصْبَحُوْا
لَا يُرٰى اِلَّا مَسَاكِنُهُمْ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.

இந்த இடத்தில் தனது தேவையை மனதிற்கொள்ளவும்.

## யாரும் இரவில் உறங்கப்போகும்போது ஓதவேண்டிய ஆயத்துகளும் விர்துகளும்

اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ
وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ مَنْ ذَا
الَّذِيْ يَشْفَعُ عِنْدَهٗٓ اِلَّا بِاِذْنِهٖ ؕ يَعْلَمُ مَا بَيْنَ
اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَيْءٍ مِّنْ
عِلْمِهٖٓ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ
وَالْاَرْضَ ۚ وَلَا يَئُوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ

اٰمَنَ الرَّسُوْلُ بِمَآ اُنْزِلَ اِلَيْهِ مِنْ رَّبِّهٖ وَالْمُؤْمِنُوْنَ ؕ
كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ ۟
لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ ۟ وَقَالُوْا سَمِعْنَا
وَاَطَعْنَا ۫ غُفْرَانَكَ رَبَّنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ ۝
لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ؕ لَهَا مَا كَسَبَتْ
وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ ؕ رَبَّنَا لَا تُؤَاخِذْنَآ اِنْ
نَّسِيْنَآ اَوْ اَخْطَاْنَا ۚ رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَآ اِصْرًا
كَمَا حَمَلْتَهٗ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِنَا ۚ رَبَّنَا وَلَا
تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعْفُ عَنَّا ۟ وَاغْفِرْ
لَنَا ۟ وَارْحَمْنَا ۟ اَنْتَ مَوْلٰىنَا فَانْصُرْنَا عَلَى
الْقَوْمِ الْكٰفِرِيْنَ ۝

شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۙ وَالْمَلٰٓئِكَةُ وَاُولُوا



الْعِلْمِ قَآئِمًا بِالْقِسْطِ ؕ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝

اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ
فِيْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۟ يُغْشِي
الَّيْلَ النَّهَارَ يَطْلُبُهٗ حَثِيْثًا ۙ وَّالشَّمْسَ وَالْقَمَرَ
وَالنُّجُوْمَ مُسَخَّرٰتٍ بِاَمْرِهٖ ؕ اَلَا لَهُ الْخَلْقُ وَ
الْاَمْرُ ؕ تَبٰرَكَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِيْنَ ۝ اُدْعُوْا رَبَّكُمْ
تَضَرُّعًا وَّخُفْيَةً ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ۝ وَلَا
تُفْسِدُوْا فِي الْاَرْضِ بَعْدَ اِصْلَاحِهَا وَادْعُوْهُ
خَوْفًا وَّطَمَعًا ؕ اِنَّ رَحْمَتَ اللّٰهِ قَرِيْبٌ مِّنَ
الْمُحْسِنِيْنَ ۝ س٣

لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ
مَا عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ
رَّحِيْمٌ ۝ فَاِنْ تَوَلَّوْا فَقُلْ حَسْبِيَ اللّٰهُ ۟ لَآ اِلٰهَ اِلَّا
هُوَ ؕ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ ۝

لَوْ اَنْزَلْنَا هٰذَا الْقُرْاٰنَ عَلٰى جَبَلٍ لَّرَاَيْتَهٗ
خَاشِعًا مُّتَصَدِّعًا مِّنْ خَشْيَةِ اللّٰهِ ؕ وَتِلْكَ
الْاَمْثَالُ نَضْرِبُهَا لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ۝
هُوَ اللّٰهُ الَّذِيْ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ ۚ

هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ ۝ هُوَ اللّٰهُ الَّذِيْ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ
اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ
الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ۚ سُبْحٰنَ اللّٰهِ عَمَّا
يُشْرِكُوْنَ ۝ هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ
لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى ۚ يُسَبِّحُ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ
وَالْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝

என்ற ஆயத்துகளை ஓதி விட்டு பிறகு ஸூரத்துல் ஃபாத்திஹா, குல்ஹுவல்லாஹு அஹது, குல் அஊது பிரப்பில் ஃபலக், குல் அஊது பிரப்பின்னாஸ் ஆகிய ஸூரத்துகளையும் ஓதி இரு உள்ளங்கைகளிலும் ஊதி தனது கைகள் எட்டும் வரை தனது உடம்பில் தடவிக் கொண்டு,

بِاسْمِكَ رَبِّيْ وَضَعْتُ جَنْبِيْ وَبِكَ اَرْفَعُهٗ اِنْ
اَمْسَكْتَ نَفْسِيْ فَارْحَمْهَا وَاِنْ اَرْسَلْتَهَا فَاحْفَظْهَا
بِمَا تَحْفَظُ بِهٖ عِبَادَكَ الصَّالِحِيْنَ . بِاسْمِكَ
اللّٰهُمَّ اَحْيٰى وَاَمُوْتُ .

என்றுஓதித் தூங்கவும்

**இரவில்தான் விரும்பிய நேரத்தில் கண் விழித்துக் கொள்வதற்காக**

ஸூரத்துல் கஹ்ஃபின் கடைசியில் வரும் கீழ்கண்ட ஆயத்துகளை ஓதி விட்டு தூங்கினால், தான் விரும்பிய நேரத்தில் விழிப்பு ஏற்பட்டு விடும். (இன்ஷா அல்லாஹ்) அந்த ஆயத்துகளின் விவரமாவது:-

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ كَانَتْ لَهُمْ
جَنّٰتُ الْفِرْدَوْسِ نُزُلًا ۝ خٰلِدِيْنَ فِيْهَا لَا يَبْغُوْنَ
عَنْهَا حِوَلًا ۝ قُلْ لَّوْ كَانَ الْبَحْرُ مِدَادًا لِّكَلِمٰتِ



رَبِّيْ لَنَفِدَ الْبَحْرُ قَبْلَ اَنْ تَنْفَدَ كَلِمٰتُ رَبِّيْ
وَلَوْ جِئْنَا بِمِثْلِهٖ مَدَدًا ۝ قُلْ اِنَّمَآ اَنَا بَشَرٌ
مِّثْلُكُمْ يُوْحٰى اِلَيَّ اَنَّمَآ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَمَنْ
كَانَ يَرْجُوْا لِقَآءَ رَبِّهٖ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا
وَّلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖٓ اَحَدًا ۝

**தூக்கத்திலிருந்து விழித்த பிறகு மீண்டும் தூக்கம் வராமலிருப்பதற்காக:**

اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ
فِيْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۗ يُغْشِي
الَّيْلَ النَّهَارَ يَطْلُبُهٗ حَثِيْثًا ۙ وَّالشَّمْسَ وَالْقَمَرَ
وَالنُّجُوْمَ مُسَخَّرٰتٍ ۢ بِاَمْرِهٖ ۗ اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ ۗ
تَبٰرَكَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِيْنَ ۝ اُدْعُوْا رَبَّكُمْ تَضَرُّعًا
وَّخُفْيَةً ۗ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ۝ وَلَا تُفْسِدُوْا
فِي الْاَرْضِ بَعْدَ اِصْلَاحِهَا وَادْعُوْهُ خَوْفًا وَّطَمَعًا ۗ
اِنَّ رَحْمَتَ اللّٰهِ قَرِيْبٌ مِّنَ الْمُحْسِنِيْنَ ۝

என்ற ஆயத்துகளை ஓதவும். விழிக்கும் போது வானத்தை நோக்கி:-

رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا . سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ

என்று ஓதவும். விழித்தவுடன்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَحْيَانِيْ بَعْدَ مَآ اَمَاتَنِيْ وَاِلَيْهِ
الْبَعْثُ وَالنُّشُوْرُ .

என்று ஓதவும்.

கீழ்கண்ட விதமாக கலிமாக்களையும், ஸூராக்களையும், ஸலவாத்தையும் ஓதுவதில் கீழ்கண்ட பலன்கள் கிட்டுமென்பதாக ஹதீஸில் வந்திருக்கிறது, அதாவது:-

1. اَسْتَغْفِرُاللّٰهَ الْعَظِيْمَ

என்ற இஸ்திஃபாரை பத்து தடவை ஓதினால் மக்கள் அனைவரையும் திருப்திப்படுத்தியவனைப் போல் ஆகிவிடுவாய்.

2. ஸூரத்துல் இஃக்லாஸ் என்னும் குல்ஹுவல்லாஹு ஸூராவை மூன்று தடவை ஓதினால் குர்ஆன் முழுவதையும் ஒரு தடவை ஓதியவனைப் போல் ( خَتْمُ செய்த வனைப்போல்) ஆகிவிடுவாய்.

3. ஷஹாதத் கலிமாவாகிய "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு, வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு" என்ற இரண்டாம் கலிமாவை ஐந்து தடவை ஓதினால் மக்கா சென்று ஹஜ்ஜு செய்தவனைப் போல் ஆகிவிடுவாய்.

4. ஸூரத்துல் ஃபாத்திஹாவை நான்கு தடவை ஓதினால் நாலாயிரம் திர்ஹமை ஸதகா (தருமம்) கொடுத்தவனைப் போல் ஆகிவிடுவாய்.

5. தவ்ஹீத் கலிமா வென்னும்

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ. لَهُ الْمُلْكُ وَلَهُ
الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ عَلٰى كُلِّ
شَيْءٍ قَدِيْرٌ

என்ற நான்காம் கலிமாவை ஏழு தடவை ஓதினால் நரகத்தின் ஏழு வாசல்களையும் அடைத்தவனைப் போல் ஆகிவிடுவாய்.

6. என் மீது (நாயகம் (ஸல்) அவர்கள் மீது) பத்து தடவை ஸலவாத்துச் சொன்னால் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை கடந்தவனைப் போல் ஆகிவிடுவாய்.

7. தம்ஜீது கலிமாவாகிய

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ
اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ.

என்ற மூன்றாம் கலிமாவை எட்டு தடவை ஓதினால் சொர்க்கத்தின் எட்டு வாசல்களையும் திறந்தவனைப் போல் ஆகிவிடுவாய்.



8. கலிமத்துத் தஹ்லீல் என்னும் 'லா இலாஹ இல்லல்லாஹு' என்ற கலிமாவை பத்து தடவை ஓதினால் எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் 'லிகா' வெனும் சந்திப்பைப் பெற்றுக் கொண்டவனைப் போல் ஆகிவிடுவாய்.

ஒவ்வொரு இரவும் துயிலப் போகுமுன் மேற்கண்ட எட்டு அமல்களையும் செய்யாமல் துயில வேண்டாமென்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அலி(ரலி) அவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள்.

நஸ்னீ மஹ்மூது سُلْطَانُ مَحْمُوْدُ الْغَزْنَوِيْ அவர்கள் ஓதி வந்த பிரபலமான ஸலவாத்து :

ஆப்கானிஸ்தானில் غَزْنِيْ என்ற ஊரைச் சேர்ந்த சுல்தான் மஹ்மூது என்ற அரசர் இந்தியாவில் பல இடங்களைப் பிடித்து இஸ்லாமிய மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்து வந்தவராவார். தெய்வ பக்தி மிகுந்தவர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அளவற்ற பாசம் கொண்டவர். சுப்ஹு தொழுது விட்டு லுஹ்ரு வரை ஒரே இருப்பில் இருந்து ஸலாவாத்து ஓதிக் கொண்டே இருப்பார். இதனால் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய முடியாமலும், அவர்களின் குறைகளை கேட்டு தீர்க்க முடியாமலும் இருந்து வந்தார். ஒரு நாள் இரவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் தோன்றி அவரை நோக்கி உம்முடைய ஓதல்கள் மிக நீளமாக போய்விடுவதால் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய முடியாமல் அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே நான் உமக்கு ஒரு ஸலவாத்தைக் கற்றுத் தருகிறேன். அதை ஒரு தடவை ஓதினால் உமக்கு ஒரு லட்சம் ஸலவாத்தின் நன்மை கிடைக்கும். அதை ஓதி விட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நீர் செய்யலாம் என்று கீழ்கண்ட ஸலவாத்தை அன்னாருக்குப் படித்துக் கொடுத்தார்கள்.

அதாவது:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ. اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ
بِعَدَدِ رَحْمَةِ اللّٰهِ. اَللّٰهُمَّ بِعَدَدِ فَضْلِ اللّٰهِ.
اَللّٰهُمَّ بِعَدَدِ خَلْقِ اللّٰهِ. اَللّٰهُمَّ بِعَدَدِ نِعَمِ اللّٰهِ.
اَللّٰهُمَّ بِعَدَدِ عِلْمِ اللّٰهِ. اَللّٰهُمَّ بِعَدَدِ كَلِمَاتِ اللّٰهِ.
اَللّٰهُمَّ بِعَدَدِ كَرَمِ اللّٰهِ. اَللّٰهُمَّ بِعَدَدِ ذِكْرِ اللّٰهِ.
اَللّٰهُمَّ بِعَدَدِ حُرُوْفِ كَلَامِ اللّٰهِ. اَللّٰهُمَّ بِعَدَدِ قَطْرِ
الْاَمْطَارِ. اَللّٰهُمَّ بِعَدَدِ وَرَقِ الْاَشْجَارِ. اَللّٰهُمَّ
بِعَدَدِ رَمْلِ الْقِفَارِ. اَللّٰهُمَّ بِعَدَدِ الْاَشْعَارِ وَ
الْاَوْبَارِ. اَللّٰهُمَّ بِعَدَدِ الْحُبُوْبِ وَالثِّمَارِ. اَللّٰهُمَّ
بِعَدَدِ اللَّيْلِ وَالنَّهَارِ. اَللّٰهُمَّ بِعَدَدِ مَا خُلِقَ فِيْ

الْبَرِّ وَالْبِحَارِ. اَللّٰهُمَّ بِعَدَدِ مَا اَظْلَمَ عَلَيْهِ اللَّيْلُ
وَاَشْرَقَ عَلَيْهِ النَّهَارُ. اَللّٰهُمَّ بِعَدَدِ مَنْ صَلّٰى
عَلَيْهِ. اَللّٰهُمَّ بِعَدَدِ مَنْ لَّمْ يُصَلِّ عَلَيْهِ. اَللّٰهُمَّ
بِعَدَدِ اَنْفَاسِ الْخَلَآئِقِ. اَللّٰهُمَّ بِعَدَدِ نُجُوْمِ
السَّمٰوَاتِ. اَللّٰهُمَّ بِعَدَدِ كُلِّ شَيْءٍ فِي الدُّنْيَا
وَالْاٰخِرَةِ. اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ
بِعَدَدِ مَا خَلَقَ رَبِّيْ وَاَحْصٰى. اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَوَاتُ اللهِ تَعَالٰى وَمَلٰٓئِكَتِهٖ
وَاَنْبِيَآئِهٖ وَرُسُلِهٖ وَجَمِيْعِ خَلْقِهٖ عَلٰى
سَيِّدِ الْمُرْسَلِيْنَ وَاِمَامِ الْمُتَّقِيْنَ وَقَآئِدِ
الْغُرِّ الْمُحَجَّلِيْنَ وَشَفِيْعِ الْمُذْنِبِيْنَ سَيِّدِنَا
وَمَوْلَانَا مُحَمَّدٍ وَّعَلٰٓى اٰلِهٖ وَاَصْحَابِهٖ وَاَزْوَاجِهٖ
وَذُرِّيَّاتِهٖ وَاَهْلِ بَيْتِهٖ وَالْاَئِمَّةِ الْمَاضِيْنَ وَ
الْمَشَآئِخِ الْمُتَقَدِّمِيْنَ وَالشُّهَدَآءِ وَالصَّالِحِيْنَ
وَاَهْلِ طَاعَتِكَ اَجْمَعِيْنَ مِنْ اَهْلِ السَّمٰوَاتِ
وَاَهْلِ الْاَرَضِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ
وَيَا اَكْرَمَ الْاَكْرَمِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.



## "தலாயிலுல் ஃகைராத்" دَلَآئِلُ الْخَيْرَاتِ "தில் வரும் ஒரு உருக்கமான துஆ

'தலாயிலுல் ஃகைராத்'தில்வரும் துஆக்களில் மிகவும் உருக்கமான துஆ கீழ்கண்ட துஆவாகும். அதாவது :

اَللّٰهُمَّ ارْحَمْ تَضَرُّعَنَا وَاٰمِنْ خَوْفَنَا وَتَقَبَّلْ
اَعْمَالَنَا وَاَصْلِحْ اَحْوَالَنَا وَاجْعَلْ بِطَاعَتِكَ
اِشْتِغَالَنَا وَاِلَى الْخَيْرِ مَآلَنَا وَحَقِّقْ بِالزِّيَادَةِ
اٰمَالَنَا وَاخْتِمْ بِالسَّعَادَةِ اٰجَالَنَا هٰذَا ذُلُّنَا
ظَاهِرٌ بَيْنَ يَدَيْكَ وَحَالُنَا لَا يَخْفٰى عَلَيْكَ
اَمَرْتَنَا فَتَرَكْنَا وَنَهَيْتَنَا فَارْتَكَبْنَا فَلَا
يَسَعُنَا اِلَّا عَفْوُكَ فَاعْفُ عَنَّا يَا خَيْرَ مَأْمُوْلٍ
وَّاَكْرَمَ مَسْئُوْلٍ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.

## மறதியையும், மிடிமைத்தனத்தை (வறுமையை)யும் உண்டு பண்ணும் செயல்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வறுமையை விட்டும் இறைவனிடத்தில் காவல் தேடியவர்களாக இருந்தார்கள்.

"வறுமை குஃப்ரின் பக்கம் சேர்த்து விடும்" என்று ஒரு ஹதீஸில் வருகிறது.

மேலும்

اَللّٰهُمَّ اجْعَلْ رِزْقَ اٰلِ مُحَمَّدٍ كَفَافًا.

"முஹம்மதின் குடும்பத்தாருக்கு பிறரிடத்தில் தேவையாகாத அளவுக்குள்ள வாழ்வை அளிப்பாயாக" என்று நபி (ஸல்) அவர்கள் துஆ கேட்டதாக ஹதீஸில் வருகிறது. எனவே வறுமையை உண்டு பண்ணும் செயல்களை செய்வதை விட்டும் நாம்

தவிர்த்துக் கொள்ளவேண்டும். கீழ்கண்ட செயல்கள் மறதியையும், வறுமையையும் ஏற்படுத்தும், அவையாவன:

1) நிர்வாணமாக நித்திரை செய்வது 2) அதிகமாக உறங்குவது 3) வெங்காயம், பூண்டு ஆகியவற்றின் தோலை நெருப்பில் போட்டு கரிப்பது 4) பொய் சொல்வது, 5) கப்ருஸ்தான்களிலிருந்து சிரிப்பது 6) புறா வளர்த்து அதனுடன் விளையாடுவது, 7) முற்பகல் (லுஹா) நேரத்தில் தூங்குவது 8) அதிகமாக கெக்கை போட்டு வெடி சிரிப்பு சிரிப்பது 9) கட்டுண்ட கிடை தண்ணீரிலும், சாம்பலிலும் சிறு நீர் கழிப்பது 10) கட்டுண்ட கிடை தண்ணீரை பார்த்துக் கொண்டு இருப்பது 11) தனது மர்மஸ்தானத்தையும், மய்யித்தின் முகத்தையும், தூக்கில் கிடப்பவனையும் பார்ப்பது 12) விபச்சாரம் செய்வது 13) தனது மனைவியிடம் அதிகமாக உடலுறவு கொள்வது, 14) பெருந்தொடக்கு உடையவனாக இருக்கும் போது தின்பது, குடிப்பது, உறங்குவது 15) வருத்தம் ஏற்படுத்தும் அளவுக்கு கண்விழிப்பது. 16) தேவையின்றி கையை மண்ணில் அல்லது களிமண்ணில் புரட்டிக் கழுவுவது, 17) பாழடைந்த இடத்தைப் பார்ப்பது, 18) வழமைக்கதிகமாய் நிர்வாணமாக மலம், ஜலம் கழிப்பது 19) மலம், ஜலம் கழிக்கச் செல்லும்போது வலது காலை முன் வைப்பது 20) இடது கையால் சாப்பிடுவது, குடிப்பது. 21) மனைவி, மக்களை நிந்திப்பது. 22) இரவில் வீடு பெருக்குவது. 23) உடுத்தியிருக்கும் உடுமானத்தால் பெருக்குவது, 24) மிஞ்சிய உணவை தூக்கி எறிவது. 25) தாய், தந்தைக்கு துஆ செய்யாதிருப்பது. 26) வீட்டில் குப்பை, கூளங்களை போட்டு வைப்பது 27) கிழிந்த ஆடைகளை அணிந்து கொண்டே தைப்பது. 28) மூட்டை, பேன், செல்லு ஆகியவற்றை கொல்லாமல் விட்டு விடுவது. 29) மூட்டை, செல்லு, பேன் போன்றவற்றை கப்ருகளின் மீது போடுவது, 30) கப்ருகளின் மீது அருவருவப்பான வஸ்துகளைப் போடுவது 31) ஜகாத்து ஃபித்ரா, ஸதக்கா, கஃப்பாரா (குற்றப்பரிகாரம்) ஆகியவற்றில் கிடைத்த அரிசி, நெல் போன்ற தானியங்களை ஏழை, எளியவர்களிடமிருந்து விலைக்கு வாங்குவது 32) எஞ்சிய உணவை பிறருக்கு கொடுக்காமல் கஞ்சத்தனம் செய்வது 33) கக்கூஸ்களில் இருந்துகொண்டு சாப்பிடுவது, உளூச் செய்வது, பல் துலக்குவது 34) அதிக சூடான உணவை உண்பது. 35) எலி, மூஞ்சூறு, பெருச்சாளி போன்றவற்றின் எச்சில்பட்ட வஸ்துவை தின்பது 36) ஒடிந்த சீப்பு போன்றவற்றால் தலை சீவுவது 37) தொழுகையை பொடுபோக்காக விடுவது 38) முட்டைத் தோடின் மீது நடப்பது 39) கப்ரின் மீஸான்களில் எழுதப்பட்டிருப்பதைப் படிப்பது 40) விளக்கு ஏற்றும் நேரம் விளக்கு ஏற்றாமல் இருப்பது. 41) சிலந்தி நூலாம்படை, தூசி ஆகியவைகளை வீட்டில் சுத்தம் செய்யாமல் விட்டு வைப்பது. 42) சாப்பிடப்படும் பொருள்கள் உள்ள பாத்திரங்களை மூடிவைக்காமல் இருப்பது 43) இரட்டைக்கதவு உள்ள இடத்தில் ஒற்றைக் கதவின் மீது சாய்வது 44) வாசற்படியில் உட்கார்ந்திருப்பது 45) கூடி நிற்கும் ஆட்களை விலக்கிக் கொண்டு நடுவில் செல்வது 46) நகங்களையும், உரோமங்களையும் பல்லினால் கடித்து எடுப்பது 47) மனிதர்களுக்கு முட்டுப்பாடான நேரத்தில் உணவு தானியங்களை பதுக்கி வைப்பது 48) பாலையும், மீனையும் உணவில் ஒன்று சேர்த்துச் சாப்பிடுவது 49) சிர்க்காவையும், புளிப்பான வஸ்துவையும் ஒன்று சேர்ப்பது 50) அழுகிய பழங்களையும், புளித்த பழங்களையும் சாப்பிடுவது 51) மொச்சை மிகுந்த மாமிசத்தைச்



சாப்பிடுவது 52) பச்சைக் கொத்தமல்லி, அதன் கீரை ஆகியவற்றைச் சாப்பிடுவது 53) கிழட்டு ஆட்டின் மாமிசத்தையும், கொழுத்த மாமிசத்தையும் சாப்பிடுவது 54) தகப்பன், ஆசிரியருக்கு மத்தியில் நடந்து செல்வது 55) கண்ட கண்ட குச்சிகளைக் கொண்டு பல் குத்துவது, 56) முழி உள்ள எழுதுகோலால் எழுதுவது 57) பிறருடைய மிஸ்வாக்கினால் பல்துலக்குவது 58) இரு பெண்களுக்கிடையில் நடந்து செல்வது 59) குளிக்கும் போது சுண்ணாம்பினால் மேனியைத் தேய்ப்பது 60) புடவையின் முந்தானைகளாலும் சட்டைக் கைகளாலும் மேனியைத் துடைப்பது 61) நின்ற நிலையில் கைலி, கால்சாட்டை போன்றவற்றை அணிவது, 62) கீழே இருந்து கொண்டு தலைப்பாகை கட்டுவது 63) கருத்த ஜுத்தா அணிவது 64) அபூபக்கர் ஸித்தீக் (ரலி), உமர் (ரலி) இவர்களை ஏசுவது 65) காற்று, மழை, இடி இவைகளை ஏசுவது 66) கடைத்தெருவில் அதிக நேரம் இருப்பது 67)சுப்ஹு தொழுதபின் யாதொரு தேவையின்றி தீவிரமாய் பள்ளியை விட்டு வெளியேறுவது 68) தீயவரை நல்லவர் என்று வாழ்த்துவது 69)நல்லவர்களை, உலமாக்களை ஏசுவது 70) நகத்தை வழமையாக அறுக்காமல் வளர்ப்பது 71) உடம்பில் ஊத்தை அதிகமாகச் சேரவிடுவது ஆகிய இந்த செயல்கள் அனைத்தும் மறதியையும், வறுமைமையும் உண்டு பண்ணும் செயல்களாகும்.

## அல்லாஹ்வுக்கும், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கும், கலீஃபாக்களுக்கும், ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கும் உகந்த மும்மூன்று செயல்கள் :

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுடைய துன்யாவில் நின்றும் எனக்கு உகந்தது மூன்று காரியங்கள். அதாவது: ஹலாலான மனைவிமார்களும், வாசனைகளும், கண்குளிர்ச்சியாய் தொழுவதுமென்று சொன்னார்கள். அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: அல்லாஹ்வின் தூதரே, நான் உங்களிடத்திலேயே இருப்பது, என் முதலை உங்கள் பேரிலே செலவு செய்வது, உங்கள் பேரில் சலவாத்துச் சொல்வது ஆக இம்மூன்றும் எனக்கு உகந்தது என்று சொன்னார்கள். உமர் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: நன்மை கொண்டு ஏவுவது, தீமையை விட்டும் தடுப்பது; ஹத்துகளை நடத்துவது ஆக இம்மூன்று காரியங்கள் எனக்கு உகந்தது என்று சொன்னாங்கள். உதுமான் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பது, அனைவருக்கும் ஸலாம் சொல்வது, இரவில் கண் விழித்து தஹஜ்ஜுத் தொழுவது ஆக இம்மூன்று காரியங்கள் எனக்கு உகந்தது என்று சொன்னார்கள். அலி (ரலி) அவர்கள் சொன்னார்கள்: விருந்தாளியை சங்கை படுத்துவது, அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவது, கோடை காலத்தில் நோன்பு பிடிப்பது ஆக இம்மூன்று காரியங்கள் எனக்கு உகந்தது என்று சொன்னார்கள். இவ்விதம் பேசிக் கொண்டிருக்கும் போது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் இறங்கி எனக்கு மூன்று காரியங்கள் உகந்தது என்றார்கள். அதாவது மிஸ்கீன்களை உகப்பதும், இறைகட்டளை கொண்டு வருவதும், நபிமார்களுக்கு நபிப்பட்டம் கொண்டு வருவதும் என்றார்கள். இவ்விதம் நடக்கும்போது இறைவன் புறத்தில் இருந்து எனக்கு மூன்று காரியங்கள் உகந்தது என்று ஓர் அசரீரி சப்தம் வந்தது. அதாவது: திக்ரு செய்யும் நாவும், நன்றி செய்யும் இருதயமும், பொறுமை செய்யும் உடலும் என்று வந்தது. இந்த செய்திகள் நான்கு இமாம்கள் அளவில் வந்து சேரவும் இமாமுல் அஃலம் அபூஹனிஃபா(ரஹ்) அவர்கள் எனக்கு மூன்று காரியங்கள் உகந்தது என்றார்கள். அதாவது: வாலிப வயதில் தானே கல்வி கற்பது, பெருமையை விடுவது, உலக ஆசையை உள்ளத்தை விட்டும் நீக்குவது ஆக இம் மூன்றும் என்று சொன்னார்கள். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் எனக்கு மூன்று காரியங்கள் உகந்தது என்றார்கள். மதீனாவில் குடியிருப்பதும், நாயகம் (ஸல்) அவர்களுடைய ரவ்லா ஷரீஃபை ஜியாரத் செய்வதும், சாதாத்துமார்களை சங்கை படுத்துவதும் என்றார்கள். இமாம் ஷாஃபிஈ(ரஹ்) அவர்கள் எனக்கு மூன்று காரியங்கள் உக்நதது என்றார்கள்: மனிதருக்கு, மிருதுவாய் உறுதிப்பாடுண்டாக்குவதும், வருத்தம் ஏற்படுத்தும் காரியங்களை விடுவதும், சூஃபியாக்களின் வழியைத் தொடர்வதும் என்றார்கள். இமாம் ஹன்பலீ (ரஹ்) அவர்கள் எனக்கு மூன்று காரியங்கள் உகந்தது என்றார்கள். அதாவது ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அறிவித்த ஹதீஸின்படி அன்னாரைத் தொடர்வதும், அவர்களின் நூரானிய்யத்தான ஹாலினால் பரகத் பெறுவதும், அவர்களின் தரீகத்தில் ஒன்றான وَرَع என்னும் பேணுதலை எடுத்து நடப்பதும் என்றார்கள்.



## உருக்கமான சில உபதேசங்களை எடுத்துக் கூறுதல்

கஃபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் தௌராத்து வேதத்தைப் படித்துப் பார்த்தேன். அதில் அல்லாஹு தஆலா கூறுகிறான் 'ஆதமுடைய மகனே, உனக்கு நான் விதியாக்கியதை நீ பொருந்திக் கொண்டால் உன் மனதுக்கு நிம்மதியளிப்பேன். பொருந்திக் கொள்ளவில்லையானால் உலகத்தை உன் பேரில் ஏவி விடுவேன். அதின் மாயையில் காட்டு விலங்குகள் ஓடித்திரிவது போல் நீயும் ஓடித்திரிவாய். அதில் நின்றும் நான் உனக்கு விதித்தது அல்லாத மற்றதை பெற்றுக் கொள்ள மாட்டாய்.

நபி(ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: 'ஒரு நண்பன் வேண்டுமென ஒருவன் நாடினால் அல்லாஹு தஆலா அவனுக்குப் போதுமானவன். உகப்பான ஒரு பொருள் வேண்டுமென ஒருவன் நாடினால் குர்ஆன் அவனுக்குப் போதுமானதாகும். உபதேசம் செய்பவன் வேண்டுமென ஒருவன் நாடினால் மௌத்தை நினைப்பது போதுமானதாகும். வாழ்வு வேண்டுமென ஒருவன் நாடினால் உள்ளதைக் கொண்டு போதுமாக்குதல் போதுமானதாகும். இந்த நான்கு செயல்களினால் உறுதி பெறவில்லையாகில் அவனுக்கு நரகம் போதுமானதாகும்.

கஃபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் நான்கு வேதங்களையும் ஓதி அதில் பன்னிரண்டு செய்திகளைத் தெரிந்து ஒரு கடித்தில் எழுதி நாளொன்றுக்கு அதை மூன்று தடவை பார்த்து உறுதி பெற்று வருகிறேன். 1-வது, அல்லாஹு தஆலா கூறுகிறான், 'ஆதமுடைய மகனே, என்னுடைய கஜானா ஒரு காலமும் செலவாகி முடிந்து போகாது. என்னுடைய கஜானா நிரப்பப்பட்டதாயிருக்கும் காலமெல்லாம் ரிஸ்கு தப்பிப் போய் விடும் என்று பயப்படாதே. 2-வது, ஆதமுடைய மகனே, நான் உன்னை உகந்தவனாயிருக்கிறேன், என்னை நீ உகந்தவனாய் இரு. 3-வது, ஆதமுடைய மகனே நீ சிராத்துல் முஸ்தகீம் பாலம் தாண்டி உன் இரு கால்களையும் சொர்க்கத்திற்குள்ளே நீ காணும் வரையில் என்னுடைய வேதனையை அச்சம் தீர்ந்தவனாகி விடாதே. 4-வது, பொருள்கள் அனைத்தையும் உனக்காகப் படைத்தேன், உன்னை எனக்காகப் படைத்தேன். 5-வது, என்னுடைய அரசாங்கம் தரிபாடாய் இருக்குமளவும் என் அல்லாதவனைப் பயப்படாதே. 6-வது, உனக்காக என்பேரில் கோபம் கொள்ளாதே. ஆனால் எனக்காக உன் பேரில் கோபம் கொள். 7-வது, மேல் வானம் தொடுத்து கீழ்பூமி வரையில் சகலவஸ்துவும்என்னைத் தேடுகின்றன. நான் உன்னைத் தேடுகின்றேன். ஆனால் நீயோ என்னை விட்டும் விரண்டோடுகிறாய் 8-வது, என்னல்லாதவனைக் கொண்டு மருகுதல் பிடியாதே. என்னை நீ எப்போது தேடினாலும் கண்டு கொள்வாய். 9-வது, என்னில் நின்றும் நாளை ரிஸ்கை தேடாதே. நான் உன்னில் நின்றும் நாளை அமலை தேட மாட்டேன். 10-வது, உன்னை ஒரு சொட்டு இந்திரியத்தினால் படைத்தேன். உனக்கு ரிஸ்கை தராமல் நான் விடவில்லை. 11-வது, உனக்கு நான் விதியாக்கியதை நீ பொருந்திக் கொண்டால் உன் மனதுக்கு நிம்மதியளிப்பேன். பொருந்திக் கொள்ளவில்லையானால் உலகத்தை உன் பேரில் ஏவிவிடுவேன். அதின் மாயையில் காட்டு விலங்குகள் ஓடித் திரிவது போல் நீயும்

ஓடித்திரிவாய். அதில் நின்றும் நான் உனக்கு விதித்ததல்லாத மற்றதை பெற்றுக் கொள்ளமட்டாய். 12-வது, என்னுடைய களாவைப் பொருந்தாமலும் பலாய் உண்டாகும் நேரம் பொறுமை செய்யாமலும், உபகாரத்திற்கு நன்றி செலுத்தாமலும் இருக்கும் ஒருவன் என்னுடைய வானத்துக்கும் கீழே இராமல் வெளியாகட்டும். என்னையல்லாமல் வேறு ஒரு நாயனைத் தேடிக் கொள்ளட்டும்.'

லுக்மானுல் ஹகீம் கூறினார்கள்: நான் படித்த அறிவில் எட்டுக் காரியங்களை தெரிந்து கொண்டேன். அதாவது: 'தொழுகையில் இருந்தால் உள்ளத்தைப் பேணிக் கொள்ள வேண்டும். மனிதர்களுக்கிடையில் இருந்தால் நாவைப் பேணிக் கொள்ள வேண்டும். சாப்பிடுவதற்கிருந்தால் தொண்டையைப் பேணிக் கொள்ள வேண்டும். அன்னிய வீட்டில் இருந்தால் கண்களைப் பேணிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வையும் மௌத்தையும் எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஒருவர் நமக்கு செய்த அபகாரத்தையும் நாம் அவருக்குச் செய்த உபகாரத்தையும் மறந்து விட வேண்டும்.

லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள் தாவூது (அலை) அவர்களை நோக்கிக் கூறினார்கள். தாவூதே என்னில் நின்றும் ஐந்து செயல்களைத் தெரிந்து கொள்ளுங்கள். அதில் முன்னோர், பின்னோர் அனைவரின் அமலும் நுழைந்து விட்டது. 1-வது, இவ்வுலகில் நீர் எவ்வளவு காலம் வாழ்வீர் என்று எண்ணுகிறீரோ அந்த அளவு அதன் பேரில் வேட்கை வைத்துக் கொள்ளும். 2-வது, மறுமையில் எவ்வளவு காலம் தரிப்பீர் என்று எண்ணுகிறீரோ அந்த அளவு அமலைத் தேடிக் கொள்ளும். 3-வது, நரகத்தின் பேரில் எந்த அளவுக்கு பொறுமை செய்ய முடியுமோ அந்த அளவு பாவத்தின் பேரில் தீராமையாய் இருந்து கொள்ளும். 4-வது, உம்முடைய நாயன் அளவில் உமக்குத் தேவை எந்த அளவோ அந்த அளவுக்கு அவனுக்குப் பணிவிடை செய்து கொள்ளும். 5-வது, நாயனுக்கு மாறு செய்ய நாடுவீராகில் அவன் உம்மைக் காணாத இடத்திலிருந்து மாறுசெய்யும்.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) திருவுளமானார்கள்: 'எனது உம்மத்தின் பேரில் பின்னால் ஒரு காலம் வரும். அதில் அவர்கள் ஐந்தை உகந்து நினைப்பார்கள். ஐந்தை இகழ்ந்து மறப்பார்கள். அதாவது அவர்கள் ஹயாத்தை உகந்து மௌத்தை மறப்பார்கள். முதலை உகந்து கேள்விக்கணக்கை மறப்பார்கள். மாளிகையை உகந்து கப்ரை மறப்பார்கள். இவ்வுலகத்தை உகந்து மறுஉலகத்தை மறப்பார்கள். படைப்பினங்களை உகந்து படைத்தவனை மறப்பார்கள்.'

ஹதீஸ் குத்ஸியில் இறைவன் கூறுகிறான்: 'அடியானே, என்னில் ஆறு காரியங்களும், உன்னில் ஆறு காரியங்களும் உண்டு. சொர்க்கம் கொடுப்பது என்னிடத்தில், வழிப்பாடு செய்வது உன்னிடத்தில். நாயகத்தன்மை என்னிடத்தில், பணிவிடை செய்வது உன்னிடத்தில். துஆவை ஏற்றுக் கொள்வது என்னிடத்தில், துஆ கேட்பது உன்னிடத்தில். பலாயை இறக்குவது என்னிடத்தில், பொறுமை செய்வது உன்னிடத்தில். ரிஸ்கு கொடுப்பது என்னிடத்தில், அதற்கு நன்றி செலுத்துவது உன்னிடத்தில். பிழைகளைப் பொறுப்பது என்னிடத்தில், தவ்பாச் செய்வது உன்னிடத்தில்.'



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: 'அல்லாஹுதஆலா கொடுத்த குறைந்த ரிஸ்கைக் கொண்டு பொருந்தினவனிடம் குறைந்த அமலைக் கொண்டு அல்லாஹ் பொருந்திக் கொள்வான்.'

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: 'அமலில்லாத ஆலிம் மழையில்லா மேகத்தைப் போன்று, கொடையில்லா சீமான் பழமில்லா மரத்தைப் போன்று, பொறுமையில்லா ஏழை தண்ணீரில்லா ஆற்றைப் போன்று, நீதமில்லா ராஜன் மேய்ப்பானில்லா ஆட்டைப் போன்று, தௌபா இல்லா வாலிபன் முகடில்லா வீடு போன்று, வெட்கமில்லா பெண் பிள்ளை உப்பில்லா உணவு போன்று.'

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: பகைவனில் உபதேசத்தையும், மடையனில் பணிவையும், அமல் இன்றி சொர்க்கத்தையும், பெண்களில் உண்மை வாக்கு நிறைவேறுவதையும் தேடுவது மிகவும் அரிது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: 'வழிபட்டவனுக்கு சொர்க்கம் கிடைக்கும். அவன் ஹபசியான அடிமையாயிருந்தாலும் சரி. வழிப்படாதவனுக்கு நரகம் கிடைக்கும். அவன் குரைஷியான நாயகனாயிருந்தாலும் சரி.'

அனஸ் இப்னுமாலிக் (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது: எதீமான பிள்ளைக்கு கிருபையுள்ள தகப்பனைப் போன்றும், கைம்பெண்ணுக்கு இரக்கமுள்ள கணவனைப் போன்றும் இரு, அவளை சந்தோஷமாக்கி அதனால் அவள் இட்ட மூச்சு ஒன்றுக்கு சொர்க்கத்தில் ஒரு மாளிகையை இறைவன் தருவான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். நாவைப்பேணு, நஃப்ஸை தடுத்துக் கொள். உன் பாவத்தை நினைத்து அழு.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: என் சமுதாய மக்களே! உங்களுக்கு ஐந்து விஷயங்களை நான் வஸிய்யத்துச் செய்கிறேன். அதாவது நீங்கள் மனிதரை நினைப்பதை விட அல்லாஹ்வை அதிகம் நினையுங்கள். உலகத்தை நினைப்பதைவிட மறுமையை அதிகம் நினையுங்கள். நன்மையை நினைப்பதை விட பாவத்தை மிகுதம் நினையுங்கள். வாழ்வை நினைப்பதை விட மரணத்தை அதிகம் நினையுங்கள். பிறரின் குறைகளை நினைப்பதை விட உங்களின் குறைகளை நினையுங்கள்.

ஹுகமாக்களில் ஒருவர் கூறுகிறார்: மூன்று செயல்கள் மிகவும் புகழப்பட்டவையாயிருக்கும். அதாவது தேவையுள்ளவர்களுக்கு கொடுப்பதும், பலவீனர்கள் செய்யும் குற்றத்தை மன்னிப்பதும், யாவருடனும் பணிவுடன் நடப்பதுமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்: சகல குணங்களிலும் மேன்மையான குணமாகிறது, முறித்து நடப்பாரை சார்ந்து நடப்பதும், அநியாயம் செய்தவரை மன்னிப்பதும்,தீங்கிழைத்தவருக்கு உபகாரம் செய்வதுமாகும்.

அபூயஜீதுல் பிஸ்தாமீ (ரஹ்) கூறுகிறார்கள்: தீன் சலாமத்தாகிறது வாக்கு நிறைவேற்றுதலைக் கொண்டும், ஈமான் சலாமத்தாகிறது பொய், புறம், கெட்ட பேச்சு, வீண் பேச்சு இவைகளை விட்டும் நாவைப் பேணுவது கொண்டும், ரூஹ் சலாமத்தாகிறது உலக இச்சைகளை விடுவது கொண்டும், நஃப்ஸு சலாமத்தாகிறது உலகத்தின் மேலெண்ணங்களையும், இன்பங்களையும் விடுவது கொண்டு மாயிருக்கும் என்று கூறினார்கள்.

இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: உணவில் இன்பத்தை நாடினவன் வணக்கத்தில் இன்பத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டான். தூக்கத்தை அதிகமாக்கியவன் வாழ்வில் பரக்கத்தைக் காண மாட்டான். மனிதரின் பொருத்தத்தைத் தேடுபவன் இறைவனின் பொருத்தத்தை வழி நோக்க மாட்டான். புறம் பேசுவதிலும், வீண் பேச்சுகளிலும் ஈடுபடுபவன் உலகத்தை விட்டுப் போகும்போது தீனுல் இஸ்லாத்தின் பேரில் போக மாட்டான்.

சஹ்லுப்னு அப்துல்லாஹித் துஸ்தரிய்யி (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : பசித்திருப்பது, தனித்திருப்பது, வாய்மூடியிருப்பது, இரவில் கண் விழித்திருப்பது ஆகிய இந்த நான்கு செயல்களில் இபுரதத் உடைய வகைகளும், மனதை கட்டுப்படுத்தும் வழி முறைகளும் அடங்கியிருக்கின்றன என்று கூறினார்கள்.

## دُعَاءُ "كَنْزُ الْعَرْشِ" "கன்ஸுல் அர்ஷ்" துஆ

இதில் சிறியதும், பெரியதும் உண்டு. பெரியதாகிறது:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْمَلِكِ الْقُدُّوْسِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْعَزِيْزِ الْجَبَّارِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْوَاحِدِ الْقَهَّارِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْحَنَّانِ الْمَنَّانِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْبُرْهَانِ الدَّيَّانِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الرَّؤُوْفِ الرَّحِيْمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْحَكِيْمِ الْكَرِيْمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْقَوِيِّ الْغَنِيِّ



لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْوَلِيِّ الْوَفِيِّ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ اللَّطِيْفِ الْخَبِيْرِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْغَفُوْرِ الْوَدُوْدِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْقَرِيْبِ الْمُجِيْبِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْوَكِيْلِ الْكَفِيْلِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الصَّمَدِ الْمَعْبُوْدِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الدَّائِمِ الْقَائِمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الرَّقِيْبِ الْحَفِيْظِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْمُحْيِي الْمُمِيْتِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْحَيِّ الْقَيُّوْمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْوَاحِدِ الْاَحَدِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْجَبَّارِ الْاَعْظَمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْمُؤْمِنِ الْمُهَيْمِنِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْخَالِقِ الْبَارِيْ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْكَبِيْرِ الْمُتَعَالِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْحَسِيْبِ الشَّهِيْدِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْقَاضِى الْاَكْبَرِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْفَتَّاحِ الْعَلِيْمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ سُبْحَانَ الْكَرِيْمِ الْحَلِيْمِ

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ.